# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,218—1964 නොවැම්බර් 7 වැනි සෙනසුරාදා—1964.11.7**

14,218 ம இலக்கம்—1964 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. கே. எல். 106.

மாட்டிறைச்சி

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினுலும் 3 (2) ம் பிரிவினுலும் களுத்துறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சாள்ஸ் சம்சன் ரணசூரிய ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1964 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ந் திகதி வெளியான 14,173 ம் இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானியில் 1964 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ந் திகதியிடப்பட்ட எனது கே. எல். 105 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை இரத்துச்செய்கிறேன் ;

(ii) இதனுேடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ள விலைகளை முறையே அப்பந்திகளின் தலைப்பில், குறிப்பிடப்பட்ட விவரணத்தையும் தரத்தையும், உடைய மாட்டிறைச்சி ஒரு இறுத்தல் அவ்வட்டவணையில் அவற்றுக்கிணயய 1 ம் பந்தியில் சொல்லப்பட்ட இடங்களில் அதற்குமேல் விற்கப்படலாகாத ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன் ;

(iii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) மாட்டிறைச்சி என்னும் கூற்று இறக்குமதி செய்யப்பட்ட, உறையச் செய்யப்பட்ட அல்லது குளிரூட்டப்பட்ட மாட்டிறைச்சியையும், எவ்வகையான கழிவுப் பொருளையும் உள்ளடக்காது ;

(ஆ) எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குடல், குளம்புகள், கழிவுகள் மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருள்களும் தவிர) விற்கப்படும்பொழுது அவ்விற்பனை " உயிரற்ற நிறை " யில் விற்பனையாகக் கருதப்படுதல் வேண்டுமெனவுங் கட்டளையிடுகிறேன் ;

(iv) மாட்டிறைச்சி எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை விற்கப்படும் மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படலாகாது என்றும் கட்டளையிடுகிறேன் ;

(v) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் எவ்விடத்திலேனும் அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரமும், தரமுங் கொண்ட மாட்டிறைச்சியைத் தம் வசத்தில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அவ்விபரத்தையும், தரத்தையுங் கொண்ட மாட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் ;

(vi) மாட்டிறைச்சி விற்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கவோ வேண்டுமென்றும், இக்கடைகளிற் குறிப்பிட்ட விபரமும் தரமுங் கொண்ட மாட்டிறைச்சியன்றி வேறெந்த வகையான இறைச்சியும் விற்கக்கூடாதெனவுங் கட்டளையிடுகிறேன் ;

(vii) அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்ட இடப்பரப்பிலுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமுங் கொண்ட மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருக்கும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய மாட்டிறைச்சி விற்கப்படும் அக்கடையில் அத்தகைய விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சி மட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள் கொண்ட அறிவித்தல் ஒன்றைப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்றுங் கட்டளையிடுகிறேன் ;

(viii) ஒரு விற்பனையில் மாட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் மாட்டிறைச்சி கழிவுகளிலிருந்து வேருக நிறுத்து விற்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் ;

(ix) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி விற்கும்பொழுது தன்னுடைய நிறுக்குந்தராசையோ தராசுகளையோ வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்துகொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவுங் கட்டளையிடுகிறேன் ;

(x) இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையுங் கொண்ட மாட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி வாங்குபவர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்றுங் கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் நிறை,

(இ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் விபரம்,

(ஈ) விற்கப்பட்ட மாட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(xi) இக்கட்டளையினுல் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும் மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாதெனக் கட்டளையிடுகிறேன் ;

(xii) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம் 4 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் அடக்கியதாதல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்;

(xiii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது நிறுத்தலளவை முறையின் பிரமாண அவோர்டுபோஸ் இருத்தலாகக் கருதப்படவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ந் திகதி மு. ப. 9 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

சீ. எஸ். ரணசூரிய,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
களுத்துறை மாவட்டம்.

**அட்டவணை**

மாட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலைகள்

| பந்தி 1 | பந்தி 2 | பந்தி 3 | பந்தி 4 |
|---|---|---|---|
| இடப்பரப்பு | மாட்டிறைச்சி (எலும்பில்லாமல்) ஒரு இருத்தலுக்கான ஆகக் கூடிய விலை | மாட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலுக்கான ஆகக் கூடிய விலை | (உயிரற்ற நிறை) மாட்டிறைச்சி ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| களுத்துறைப் பரிபாலன மாவட்டம் .. | 0 90 .. | 0 80 .. | 0 70 |

குறிப்பு.—மேற்குறித்த விலைகள் 1 இருத்தல் மாட்டிறைச்சி விற்கப்படக்கூடிய குறிப்பிட்ட விலைகளல்ல; ஆனால் 1 இருத்தல் அவற்றுக்குமேல் விற்கப்படலாகாத **ஆகக்கூடிய** விலைகளாகும்.

11–305.

---

1964 ம் ஆண்டின் உணவு விலைக் கட்டளை இலக்கம் ஜீ. 5. **அரிசியும் நெல்லும்**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கார்தியே புஞ்சிகேவகே புத்ததாஸ த சில்வா ஆகிய நான் இக்கட்டளையால் —

(i) 1963 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ந் திகதி வெளியான 13,709 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1963 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதியையுடைய 1963 ம் ஆண்டின் ஜீ 5 ம் இலக்கத்தைக்கொண்ட எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கிவிடுகிறேன் ;

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் இரண்டாவது பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள விலைகளை இதனோடிருக்கும் அட்டவணையின் முதலாவது பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்புகளின் எல்லைகட்குள் ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக் கூடிய மொத்த விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அரிசியை இவ்விடப்பரப்புகளின் எல்லைகட்குள் எவரும் மொத்தமாக விற்பனை செய்தலாகாது ;

(iii) இதனோடிருக்கும் அட்டவணையின் மூன்றாவது பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள விலைகளை இதனோடிருக்கும் அட்டவணையின் முதலாவது பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்புகளின் எல்லைகட்குள், ஒரு நிகர இருத்தல் நிறை அரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அரிசியை இவ்விடப்பரப்புகளின் எல்லைகட்குள் எவரும் சில்லறையாக விற்பனை செய்தலாகாது ;

(iv) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள பங்கீட்டரிசியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலைகளின் அரைவாசி விலையினைப் பங்கீடு செய்யப்படும் ஒவ்வொரு நிகர அந்தர் நெல்லின் ஆகக்கூடிய மொத்த விலைகளாகவும் இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள ஒரு நிகர இருத்தல் நிறைப் பங்கீட்டரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலைகளின் அரைவாசி விலையினைப் பங்கீடு செய்யப்படும் ஒவ்வொரு நிகர இருத்தல் நிறை நெல்லின் ஆகக்கூடிய சில்லறை விலைகளாகவும் இதனோடிருக்கும் அட்டவணையின் முதலாவது பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்புகளின் எல்லைகட்குள் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக நெல்லை இவ்விடப்பரப்புகளின் எல்லைகட்குள் எவரும் விற்பனை செய்தலாகாது.

(v) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எந்த அளவு அரிசியையோ நெல்லையோ திருப்பி விற்பதற்காக எவ்விதத்திலாவது விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) எந்த அளவு அரிசியையோ நெல்லையோ பாவனைக்கு அல்லது உபயோகத்திற்காக எவ்விதத்திலாவது விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய நிறையில் அரிசியோ நெல்லோ மொத்தமாக விற்கப்படுமிடத்து அந் நிறைக்குத் தரப்படவேண்டிய ஆகக்கூடிய விலை, வழமைபோல், ஒரு நிகர அந்தருக்குரிய ஆகக்கூடிய விலையினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படவேண்டும் ;

(ஈ) "பங்கீடு" என்பது உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் ஒரு பாவனையாளருக்கு விநியோகிக்கப்படவேண்டிய அரிசி அல்லது நெல்லின் அளவுப் பிரமாணத்தைக் குறிப்பதாகும் ;

(உ) "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த இடப்பரப்பிலும் அரிசியையோ நெல்லையோ எவரும் வேறு எந்தப் பொருளோடும் கலந்து விற்பனை செய்தலாகாதென ஆணையிடுகிறேன் ;

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த இடப்பரப்பிலும், எத்தொகையிலாவது அரிசியினையோ அல்லது நெல்லினையோ தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் அரிசி அல்லது நெல்லின் ஒரு சிறு தொகையினைத் தகுந்ததொரு கொள்கலத்தில் வைத்து உரிய இடப்பரப்பில் உரிய பொருளுக்கு இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளை ஒரு அங்குல பிரமாண உயரத்துக்குக் குறையாத எண்களில் விலையட்டைகளிலோ அல்லது பலகைகளிலோ எழுதி அவ்வப் பொருளுக்கு உரிய விலையினை அவ்வப்பொருளின் சிறு தொகையினைக் கொண்ட கொள் கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பாவனையாளரது பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(viii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த இடப்பரப்பிலும் அரிசியையோ அல்லது நெல்லையோ சில்லறையாக விற்பனை செய்யும் எந்த நபரும் அப்பொருளினை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு வழங்கவேண்டுமென ஆணையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்கப்பட்ட அரிசி அல்லது நெல்லின் அளவு (நிறையில்),

(இ) விற்கப்பட்ட அரிசி அல்லது நெல்லுக்குக் கொடுக்கப்பட்ட விலை,

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(ix) அரிசி அல்லது நெல் விற்கப்படுமிடத்து அதனை வைத்துக் கொடுக்கும் கொள்கலம் அல்லது சுற்றிக் கொடுக்கும் மேலுறை ஏதாவது உபயோகிக்கப்படின் இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் காலிக் கச்சேரியிற் கைச்சாத்திடப்பட்டது.

கா. பு. பு. த சில்வா,
காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக்
கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1<br>இடப்பரப்பு | பத்தி 2<br>ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>ஒரு நிகர இறாத்தல் அரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| காலி மாநகரசபைப் பகுதியும் நாலு முறிவுப் பகுதியும் அக்மீமனை கி. ச. பகுதி போப்பே கி.ச. பகுதி போத்தலை கி.ச. பகுதி | 14 62 | 0 13¾ |
| அம்பலாங்கொடை ந. ச. பகுதி, மாதம்பை கி.ச. பகுதி | 14 78 | 0 14 |
| வந்துகெதரை ப.ச. பகுதி கரந்தேனிய கி.ச. பகுதி | 14 82 | 0 14 |
| வேரகொடை கி.ச. பகுதி பட்டப்பளை கி.ச. பகுதி | 14 78 | 0 14 |
| அஹங்கமை ப.ச. பகுதி கத்தளுவை கி.ச. பகுதி | 14 84 | 0 14 |
| ஹபருதுவை கி.ச. பகுதி (மலாகொடை கிராம சேவகர் பிரிவு தவிர) | 14 68 | 0 13¾ |
| மலாகொடை கிராம சேவகர் பிரிவு | 14 66 | 0 13¾ |
| கோதகொடை கி.ச. பகுதி | 14 84 | 0 14 |
| கொட்டவை கி.ச. பகுதி | 14 86 | 0 14 |
| பத்தேகமை கி.ச. பகுதி வந்துறம்பை கி.ச. பகுதி தெலிக்கடை-மாஜுவானை கி.ச. பகுதி | 14 76 | 0 14 |
| பிட்டிகலை-வயிஹேனை கி.ச. பகுதி (பிட்டிகலை கிராம சேவகர் பிரிவு தவிர) | 15 01 | 0 14 |
| பிட்டிகலை கிராம சேவகர் பிரிவு | 14 57 | 0 13¾ |
| போத்திவலை-நியாகமை கி.ச. பகுதி | 15 01 | 0 14 |
| தொடந்துவை ப.ச. பகுதி இரத்கமை கி.ச. பகுதி | 14 58 | 0 13¾ |
| ஹிக்கடுவை கி.ச. பகுதி ஹிக்கடுவை ப.ச. பகுதி | 14 62 | 10 13¾ |
| பலப்பிட்டிய ப.ச. பகுதி | 14 84 | 0 14 |
| ஹக்மன ஹந்திய கி.ச. பகுதி | 14 97 | 0 14 |
| கொஸ்கொட கி.ச. பகுதி | 14 88 | 0 14 |
| பெந்தோட்டை கி.ச. பகுதி | 15 00 | 0 14 |
| எல்பிட்டிய கி.ச. பகுதி எல்பிட்டிய ப.ச. பகுதி | 14 49 | 0 13¾ |
| நாகொடை கி.ச. பகுதி | 14 96 | 0 14 |
| ஹினிதுமை கி.ச. பகுதி ஓப்பாத்தை கி.ச. பகுதி நெலுவை கி.ச. பகுதி | 15 17 | 0 14¼ |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும் இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

1964 ம் ஆண்டின் உணவு விலைக் கட்டளை இலக்கம் ஜீ. 6 — கோதுமை மாவு.

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கார்தியே புஞ்சிகேவகே புத்ததாஸ த சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ம் திகதி வெளியான 13,728 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 7 ம் திகதியையுடைய 1963 ம் ஆண்டின் ஜீ 7 ம் இலக்க எனது உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கிவிடுகிறேன்;

(ii) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்குள்ள விலை மொத்த வியாபாரியின் 148 றுத்தலுக்கு மொத்த விலையாகவும், இதை மீறி முதலாம் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் காலி மாவட்ட அதிகாரியின் ஆட்சிக்கு உட்பட்ட இடப்பரப்புகளில் விற்பனையாகக்கூடாதெனவும் ;

(iii) இரண்டாவது அட்டவணையில் 3 ம் பத்தியிற் தரப்பட்டுள்ள விலைகள் ஒரு சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை, றுத்தல் ஒன்றிற்கெனவும், அது பொருட்களை வாங்கும் வழமையாளருக்கெனவும், இவற்றை மீறி முதலாவது அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் இரண்டாவது அட்டவணையின் முதலாம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள காலி மாவட்ட அதிபரின் ஆட்சிக்குட்பட்ட இடப்பரப்புகளில் விற்பனையாகக்கூடாதெனவும்;

(iv) இரண்டாவது அட்டவணையில் இரண்டாவது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள 148 றுத்தல் நிறைக்கு குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விலையினது பங்கீட்டுடன் 148 றுத்தலுக்கு கூடிய அல்லது குறைந்த கோதுமை மாவின் விற்கும் மொத்தவிலையாக இருக்கவேண்டுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்;

(v) இக்கட்டளையின் நோக்கத்திற்கு —

(a) முதலாவது அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள “ கோதுமை மாவு ” சோள மாவின் கலப்பையே குறிக்கும்,

(b) மொத்த விலை விற்பனை என்பது திரும்ப விற்பனையாகும் எந்த ஒரு தொகையையும் அல்லது 1 அந்தர் தொகை அல்லது அதற்கும் கூட உள்ள விற்பனையையும் குறிக்கும்,

(c) சில்லறை விலை விற்பனையென்பது வாங்குபவரினது பாவிப்பிற்கு விற்கப்படும் 1 அந்தரிலும் குறைந்த தொகையின் விற்பனையைக் கருதும்;

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை அதிகரிக்கப்பட்ட எந்த இடப்பரப்புள்ளும் எவரும் கலப்படப்பட்ட கோதுமை மாவு, சோள மாவை தவிர விற்றலாகாது;

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவு தன் வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் கோதுமைமாவினது ஒரு சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குலத்திற்கு குறையாத எண்களில் அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் கொள்பவர் நன்கு பார்க்கத்தக்கவாறு அக்கொள்கலத்தில் இணைத்தும் பகிரங்கமாகவும் பார்வைக்கு வைக்கவேண்டுமென்றும் கட்டளையிடுகிறேன்;

(viii) இக்கட்டளையின் நோக்கத்திற்கு “ இருத்தல் ” அல்லது “ இரு ” என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாக கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்;

(ix) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் கோதுமை மாவை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருபவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டொன்று வழங்குதல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,
(ஆ) விற்கப்பட்ட பொருட்களின் அளவு,
(இ) விற்ற பொருளுக்குக் கொடுக்கப்பட்ட விலை,
(ஈ) எவ்விதமான விற்பனை—மொத்தமாகவா, சில்லறையாகவா;

(x) கோதுமை மாவு விற்கப்படுமிடத்து ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் யாதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்குமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2 ம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு காலிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

கா. பு. பு. த சில்வா,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
காலி மாவட்டம்.

### முதலாவது அட்டவணை

விவரணையும் தரமும்—கோதுமை மாவு.

### இரண்டாவது அட்டவணை

| பத்தி 1<br>எல்லைகள் | பத்தி 2<br>148 றுத்தலுக்கு ஆகக்கூடிய மொத்த விற்பனவு விலை | பத்தி 3<br>1 றுத்தலுக்கு சில்லறை விற்பனவு விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| காலி மாநகரசபை எல்லை போ(f)ர் கி(g) றுவற்ஸ் எல்லை<br>அக்மீமன கிராமசபை எல்லை<br>போ(b)ப் கிராமசபை எல்லை<br>பொட்டல கிராமசபை எல்லை | 34.48 | 0 24½ |
| அம்பலாங்கொடை நகரசபை எல்லை<br>மாதம்பை கிராமசபை எல்லை | 34.69 | 0 24½ |
| வத்துகெதற பட்டினசபை எல்லை<br>கரணதெனிய கிராமசபை எல்லை | 34.75 | 0 24½ |

| பத்தி 1<br>எல்லைகள் | பத்தி 2<br>148 றுத்தலுக்கு ஆகக்கூடிய மொத்த விற்பனவு விலை | பத்தி 3<br>1 றுத்தலுக்கு சில்லறை விற்பனவு விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| வெறகொட கிராம சபை எல்லை | | |
| (B) பற்றப்பொல கிராம சபை எல்லை | 34.69 | 0 24½ |
| ஆன்க(G) ம பட்டின சபை எல்லை | | |
| கற்றுவா கிராம சபை எல்லை | 34.77 | 0 25 |
| ஹபருதுவ கிராமசபை எல்லை [மெலாகொட கிராம விதானை பிரிவு நீங்கலாக] | 34.56 | 0 24½ |
| மெலாகொட கிராம விதானை பிரிவு | 34.53 | 0 24½ |
| கொடகொட கிராம சபை எல்லை | 34.77 | 0 25 |
| கொற்றுவா கிராம சபை எல்லை | 34.80 | 0 25 |
| (B) பத்தேகம கிராம சபை எல்லை | | |
| வந்துறப்ப கிராம சபை எல்லை | 34.67 | 0 24½ |
| தெலிக்கடமஜவன கிராம சபை எல்லை | | |
| பிற்றிக்கலவெஹெரை கிராமசபை எல்லை [பிற்றிக்கல கிராம விதானைப் பிரிவு நீங்கலாக] | 35.04 | 0 25 |
| பிற்றிக்கல கிராம விதானை எல்லை | 34.41 | 0 24½ |
| பொட்டிவல-நியாகம கிராம சபை எல்லை | 35.04 | 0 25 |
| வெலிவிற்றிய-டெவிற்றுற கிராம சபை எல்லை | | |
| டொடண்டுவ பட்டின சபை எல்லை | 34.42 | 0 24½ |
| றத்கம கிராம சபை எல்லை | | |
| ஹிக்கடுவா கிராம சபை எல்லை | 34.48 | 0 24½ |
| ஹிக்கடுவா பட்டின சபை எல்லை | | |
| (B) பலப்பிட்டிய பட்டின சபை எல்லை | 34.77 | 0 25 |
| உறகஸ்மன்ஹண்டிய கிராம சபை எல்லை | 34.95 | 0 25 |
| கொஸ்கட கிராம சபை எல்லை | 34.83 | 0 25 |
| (B) பென்ரோற்ற கிராம சபை எல்லை | 34.98 | 0 25 |
| எல்பிட்டிய கிராம சபை எல்லை | 34.30 | 0 24½ |
| எல்பிட்டிய பட்டின சபை எல்லை | | |
| நாகொட கிராம சபை எல்லை | 34.94 | 0 25 |
| ஹினிடும கிராமசபை எல்லை | | |
| ஒபாத கிராம சபை எல்லை | 35.22 | 0 25 |
| நெல்லுவா கிராமசபை எல்லை | | |

குறிப்பு.—மேற்காட்டிய விலைகள் கட்டுப்பாட்டு நிதான விலைகள் அல்ல. அவைகள் கோதுமை மாவு ஆகக்கூடுதலாக விற்கப்படக்கூடிய விலைகளாகவும் அவற்றிற்கு மேல் விற்கப்படாது இருப்பதையுமே குறிக்கின்றன.

11—301

---

உணவு விலைக்கட்டளை இல. கேயு/52/64 **பழுப்புச் சீனி**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

அத்தியாயம் 173 விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு குருநாகல் பரிபாலன மாவட்டத்திற்கு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) , சார்ல்ஸ் அபேதீர ஆகிய நான் இக்கட்டளையால் —

(1) 1963 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ம் திகதியைக்கொண்ட 13,843 ம் இலக்க அதிவிஷேட இலங்கை அரசாங்க வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேயு/44/63 இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக நிராகரித்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம் 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் இந்த விலைக்குக் கூடுதலாக விற்கலாகாது என விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக —

(அ) எத்தொகையான சீனியை திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான பழுப்புச் சீனியை பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(இ) எவ்விதமான கருப்பட்டியும் பழுப்புச் சீனியுடன் சேர்க்கப்படாது.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகளை நிர்ணயிக்கும் பகுதிகளில் சீனியை வேறெவ்வித பொருட்களுடனும் கலந்து விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகளை நிர்ணயிக்கும் பகுதிகளில் சீனியை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்திலுள்ள சீனியின் தொகை இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குலத்திற்கு குறையாத உயரத்தைக்கொண்ட எண்களில் விலைக்குறிப்பு அட்டைகளில் அல்லது விளம்பரப் பலகையில் பொருத்தப்பெற்று பாவனையாளருக்குச் சீனியும் ஆகக்கூடிய விலைகளும் நன்றாகத் தெரியக்கூடியதாக அக்கொள்கலத்துடன் இணைத்து பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இறுத்தல் " அல்லது " இறு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகளை நிர்ணயிக்கும் பகுதிகளில் சீனியை மொத்த விலையாகவோ அல்லது சில்லறை விலையாகவோ விற்கும் ஒவ்வொருவருக்கும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு அன்னாருக்கு பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற சீனியின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பழுப்புச் சீனி விற்குமிடத்து அட்டவணையின் 3 ம் 4 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், பழுப்புச் சீனியை அவ்வாறு சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ம் தேதியன்று குருநாகல் கச்சேரியில் 4.00 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

வீ. அபேதீர,
உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
குருநாகல் மாவட்டம்.

**அட்டவணை**

| பத்தி 1 | பகுதி 2 | பத்தி 3 | | பத்தி 4 | |
|---|---|---|---|---|---|
| விபரம் | பத்தி | மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | | சில்லறை வியாபாரி ஒருவர் இறுத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை | |
| | | ரூ. | ச. | ரூ. | ச. |
| பழுப்புச் சீனி .. | குருநாகல் மாநகர சபைப் பகுதி .. .. | 68 | 33 | 0 | 63½ |
| | குளியாப்பிட்டி நகர சபைப் பகுதி .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | பொல்காவலை பட்டின சபைப் பகுதி .. | 68 | 31 | 0 | 63½ |
| | கிராம சபைப் பகுதிகள் :— | | | | |
| | அலாவ்வ .. .. .. | 68 | 31 | 0 | 63½ |
| | பிங்கிரியா .. .. .. | 68 | 37 | 0 | 64 |
| | போயகண .. .. .. | 68 | 33 | 0 | 63½ |
| | தம்பதெனியா .. .. | 68 | 31 | 0 | 63½ |
| | டும்மலசூரிய .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | கெமங்கல .. .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | கொறம்பாவ .. .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | களுகமுவ .. .. .. | 68 | 53 | 0 | 64 |
| | மாகண்டுற .. .. .. | 68 | 30 | 0 | 63½ |
| | முறுதெங்க .. .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | நாறம்மல .. .. .. | 68 | 31 | 0 | 63½ |
| | பண்ணல .. .. .. | 68 | 22 | 0 | 63½ |
| | பிட்டும .. .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | பில்லச .. .. .. | 68 | 43 | 0 | 64 |
| | பொல்காவெல .. .. | 68 | 31 | 0 | 63½ |
| | பொத்துகர .. .. .. | 68 | 31 | 0 | 63½ |
| | உடுபத்தாவ .. .. .. | 68 | 34 | 0 | 63½ |
| | வெல்லவ .. .. .. | 68 | 33 | 0 | 63½ |
| | கிரிபிட்டிய .. .. .. | 68 | 53 | 0 | 64 |
| | பலல்ல .. .. .. | 68 | 53 | 0 | 64 |
| | தொடங்கஸ்லந்தை .. .. | 68 | 49 | 0 | 64 |
| | கொக்கறல்ல .. .. .. | 68 | 49 | 0 | 64 |
| | கெற்றிபொல .. .. | 68 | 40 | 0 | 64 |
| | கனேகம .. .. .. | 68 | 40 | 0 | 64 |
| | மாகோ .. .. .. | 68 | 53 | 0 | 64 |
| | நிக்கவெறட்டிய .. .. | 68 | 53 | 0 | 64 |
| | ரம்பொடகல்ல .. .. | 68 | 53 | 0 | 64 |
| | வாறியபொல .. .. | 68 | 50 | 0 | 64 |
| | வேயுட .. .. .. | 68 | 53 | 0 | 64 |
| | அம்பன்பொல .. .. | 68 | 53 | 0 | 64 |
| | எகற்றுவேவ .. .. | 68 | 68 | 0 | 64 |
| | கல்கமுவ .. .. .. | 68 | 60 | 0 | 64 |
| | மகண்ணண்நேரிய .. .. | 68 | 60 | 0 | 64 |
| | பொல்பிற்றிகம .. .. | 68 | 60 | 0 | 64 |
| | தம்புறும்புவ .. .. | 68 | 53 | 0 | 64 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்கலாகாது.

11-303

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோபபரேஷனால் உறபத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.